ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

समस्तभुवनादनप्रपटुकालमर्धक्षणात्
त्वदेकपदताडनाज्जितवतो द्विजं रक्षितुम् ।
ममावनमिदं कियत्तव महेश गौरीपते
प्रभो झटिति पालय त्यजसमस्तशङ्कां द्रुतम् ॥

𑌸𑌮𑌸𑍍𑌤𑌭𑍁𑌵𑌨𑌾𑌦𑌨𑌪𑍍𑌰𑌪𑌟𑍁𑌕𑌾𑌲𑌮𑌰𑍍𑌧𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍
𑌤𑍍𑌵𑌦𑍇𑌕𑌪𑌦𑌤𑌾𑌡𑌨𑌾𑌜𑍍𑌜𑌿𑌤𑌵𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑌂 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌮𑍍 ।
𑌮𑌮𑌾𑌵𑌨𑌮𑌿𑌦𑌂 𑌕𑌿𑌯𑌤𑍍𑌤𑌵 𑌮𑌹𑍇𑌶 𑌗𑍌𑌰𑍀𑌪𑌤𑍇
𑌪𑍍𑌰𑌭𑍋 𑌝𑌟𑌿𑌤𑌿 𑌪𑌾𑌲𑌯 𑌤𑍍𑌯𑌜𑌸𑌮𑌸𑍍𑌤𑌶𑌙𑍍𑌕𑌾𑌂 𑌦𑍍𑌰𑍁𑌤𑌮𑍍 ॥

ஸகல உலகங்களையும் ஸாப்பிடுவதில் மிகவும் சக்திபொருந்தினவனுன காலன் என்கிற இயமனை பிராமணனைப் பாதுகார்க்க வேண்டி உம்முடைய ஒரே பாதத்தால் உதைத்து ஜயித்தவரான உமக்கு என்னை ரக்ஷிப்பதென்பது எவ்வளவு சிறிய காரியம். ஸ்ரீ பார்வதி தேவிக்குப் பதியாயும் ஸர்வஜகத்திற்கும் பிரபுவாயும் விளங்கும ஹே மஹேச்வர! சீக்கிரமாக என்னைப்பாதுகாரும். இவன்ரக்ஷிப்பதற்கு அருகனு பாபியா புண்யம் செய்தவனு என்கிற இவைபோன்ற சங்கையை சீக்கிரம் விட்டுவிடும்.

ஒரு பக்தர் ஸ்ரீ பரமேசுவரரிடம் அடியில் வருமாறு பிரார்த்திக்கிறார்.

எல்லாப் பிராணிகளையும் ஆகாரமாகக்கொள்ளும் இயமனை ஜயித்த உமக்கு என்னை ரக்ஷிப்பதென்பது மிகவும் அற்பமான காரியம் மேலும் ஸகல உலகங்களுக்கும் நீரே பிரபுவாயுமிருக்கிறீர் உமக்குச் செய்ய முடியாத காரியம் ஒன்றுமில்லை. ஆகையால் நம்மால் ரக்ஷிப்பதற்கு இவன் அருகனு? சிறந்த தர்மங்களை அனுஷ்டித்து நம்மையும் விதிப்படி ஆராதித்திருக்கிறனு என்று பலவாறு சங்கித்து என்னைக் கைவிடாமல் சீக்கிரமாகப் பாதுகார்க்க வேண்டும்.

சுபம்!

**உபபத்திராதிபர்.**

# ஆர்யதர்மம்.

விபவ-ஹூ சித்திரை-மீ உகவ

## கும்பகோணம் ராஜாபாடசாலையும்

# சங்கரஜயந்தி மகோத்ஸவமும்.

இவ்வூரில் காமாக்ஷி ஜோஸியர் அக்கிரகாரத்தில் மேலக்கோடியில் கர்னுடகஸ்மார்த்த ப்பிராமணரான கோவிந்ததீக்ஷிதர் என்கிற ஒருமஹானுல் ஏற்படுத்தப்பட்ட வேதசாஸ்திரபாடசாலையானது வெகுகாலமாய் நடைபெற்று வருகிறதென்பது யாவராலும் அறியப்பட்டவிஷயமே-அந்தப்பாடசாலையில் டிரஸ்டிகளின் பிரார்த்தனையின் பேரில் சுமார் 7-8 மாதகாலமாக இவ்வூரில் விளங்கும் பிரம்மஸ்ரீ சாஸ்திர ரத்நாகரம் யக்ஞசுவாமி சாஸ்திரியளவர்கள் வித்யாவிசாரணையை நன்கு கவனித்து வருகிருர்கள். இந்தப் பாடசாலையில் படிக்கும் ஆசார்ய பக்தி வாய்ந்த வித்தியார்த்திகளுடைய முயற்சியால் ஸ்ரீ சங்காஜயந்தி மஹோத்ஸவமானது 4, 5, வருஷகாலம் நன்கு நடபெற்று வந்தது. பிறகு ஸமீபத்திலுள்ள 2, 3, வருஷங்களாகப் பல காரணங்களால் பையன்கள் எவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டும் இந்த ஜயந்திமஹோத்ஸவம் நடைபெருமல் நின்று விட்டது. இந்த வருஷமும் ஷை பாடசாலை வித்யார்த்திகள் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்கிற பழமொழிக்கிணங்க முயற்சி எடுத்துக்கொண்டு தற்காலம் வித்யாவிசாரணை கர்த்தாவாகிய பிரம்மஸ்ரீ சாஸ்திரியளவர்களிடம் ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாளுடைய படம் ஒன்றை பூஜைக்கென்று அவ்விடத்தில் பிரதிஷ்டை செய்து ஸ்ரீ சங்கராஜயந்தி உத்ஸவத்தையும் 2-தினம் நடத்த வேண்டுமென்று தங்களபிப்பிராயத்தைத் தெரிவித்து நீங்களும் கூட இருந்து இந்த உத்தம காரியத்தை நிர்விக்னமாய் பூர்த்திசெய்துகொடுத்து ஸ்ரீ பரமாசார்யாளுடைய அனுக்கிரஹத்திற்கு எங்களைப் பாத்திராளாகச்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். மிகவும் அறிவாளிகளாயும் அதிகமான குருபக்தியுள்ளவர்களுமான பெரியோர்களால் நடத்தவேண்டிய

இந்த உத்தம காரியத்தில் நீங்கள்சிரத்தை எடுத்துக்கொண்டவிஷ யத்தில் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன் என்று ஷேசாஸ்திரி யள் தம் அபிப்புராயத்தை அறிவித்து என்னால்செய்யவேண்டி யது என்னவென்று வினவினர்கள். இந்த வார்த்தையைக்கேட்டு அதிக ஆனந்தங்கொண்ட வித்யார்த்திகள்இரண்டுநாள் உத்ஸவம் நடத்த வேண்டுமென்றும் அபிஷேகார்ச்சன ஆராதன ஸமயங் களில் தாங்கள் கூட இருந்து விதிப்படி செய்யும்படி ஆக்ஞை செய்து ஸ்ரீ பரமாயாரியாளுடைய சரித்திர உபன்யாஸத்தையும் எங்களேக் கேட்கும்படிச் செய்து அனுக்கிரகிக்க வேண்டுமென்று அறிவித்தார்கள்.

நல்லகாரியமாயிருப்பதால் உங்களிஷ்டம்பூர்த்தியாகும். ஆனாலும் டிரஸ்டிகளிடமும்இதைத்தெரிவித்துஅவர்களும் அபிப்பிராயப்பட் டால் நீங்கள் உபக்கிரமித்து நடத்தலாமென்றும் அறி வித்தார்கள். உடனே இந்த விஷயத்தை மேலதிகாரிகளிடமும் தெரிவித்து அவர்களும் நல்லகாரியம் அவசியம் நடத்த வேண் டியதுதான் நடத்துங்கள் என்று அனுமதி கொடுத்து விட்டார் கள். இதையும் சாஸ்திரியளிடம் தெரிவித்துப் பத்திரிகை போட வேண்டுமென்று கேட்டதில் முதல் நாள் உத்ஸவத்தில் உபன்யா ஸத்திற்கு என்னேப் போடும்படியும் மறுதினம் அவர்கள் சொல்லு வதாகவும் அங்கீகரித்தார்கள். உடனே இந்த அபிப்பிராயத்தை என்னிடமும் தெரிவித்து என் அனுமதியையும் பெற்று நோடீசும் போட்டு விட்டார்கள். இதையறிந்த இவ்வூர் வாஸிகளான சில துர்புத்திகள் கோவிந்ததீக்ஷிதர் ஸ்மார்த்தரல்லவென்றும், இதர மதஸ்தராயுமிருக்கலாமென்றும் ஸ்ரீ சங்கராசார்யாள் படத்தை மாத்திரம் பிரதிஷ்டை செய்யக்கூடாதென்றும் டிரஸ்டி முதலான வர்களுக்கு மனுமூலம் தெரிவித்து வெகு பிரயாஸப்பட்டும் பயன் படாமல் போயிற்று. ஸ்ரீ சங்கரஜயந்திக்கு முதல் நாள் காலேயில் ஸ்ரீ மடத்தில் வித்யார்த்திகளால் தயார் செய்து வைக்கப்பட்டி ருந்த ஸ்ரீமதாசார்ய படத்தை நன்கு அலங்கரித்து மிகவும் பரிசு த்தனை ஒரு பையனே எடுத்துக்கொள்ளும்படி செய்து அவனேக் காரில் வைத்து மேளவாத்திய கோஷங்களுடனும், வேதபாராய ணங்களுடனும், மற்றும் பல வைதிக லௌகிக ஜனங்களுடனும் ஸ்ரீஜகத்குருசங்கராசார்யமடத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய் ஷேகோவிந்ததீக்ஷிதரவர்களுடையவித்யாசாலேயில்சுப முகூர்த்தத்

தில் விதிப்படி பிரதிஷ்டைசெய்து உடனே ஸ்ரீ சங்கரபாஷ்ய,ராமாயண வேத உபநிஷத் பாராயணங்களுடன் கூட அபிஷேகம் ஆசார்யஸஹஸ்ரநாமார்ச்சனம், தீபாராதனம், பிரசாத விநியோகம் முதலான காரியங்களை நடத்தி முடிவில் ஷை வித்யாசாலையை ஸ்தாபனம் செய்தவரான பிரம்மஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களுடைய சரித்திரத்தையும் மகிமையையும்பற்றி பிரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரியள் சில துர்புத்திகள் கூறும் அபிப்பிராயம் ஸரியல்லவென்பதை பாலர்களும் சுலபமாய் பிரமாணத்துடன் அறிந்துகொள்ளும்படி நன்கு உபன்யஸித்தார்கள். அன்றிரவு அடியேனுடைய உபன்யாஸமும் நடைபெற்றது. அந்த ஸமயமும் பல பிரமுகர்களும், தேவஸ்தானம் டிரஸ்டிகளுக்குள் முக்கியமானவரும், ஆஸ்திகரும், குருபக்திபுடையவருமான கனம். சிங்காரம் செட்டியாரவர்களும் வந்திருந்தார்கள். மறுதினமும் காலையில் ஆசார்ய பிம்பத்திற்கு விஸ்தாரமாய் அபிஷேகம், அர்ச்சனம் முதலான ஆராதனங்கள் நடந்து. மாலையில் 4-மணிக்கு பிரம்மஸ்ரீ யக்ஞசுவாமி சாஸ்திரியளுடைய உபன்யாஸமும் நடைபெற்றது. அந்த சமயம் கனம். சுந்தராமய்யர், ராவ்பகதூர் அப்புசாஸ்திரியள், ஆர். சுவாமிநாதய்யர், முதலான பல பிரமுகர்களும் வந்திருந்தார்கள். உபன்யாசமுடிவில் சகல ஜனங்களும் அதிக சந்தோஷத்துடன் ஸ்ரீமதாசார்ய பிரசாதம் பெற்று நிர்விக்னமாய் ஸ்ரீ ஜயந்தி மகோத்சவம் பூர்த்தியடைந்தது. இந்த வித்தியார்த்திகள் இவ்விதம் பிரதி வருஷமும் இந்தப்புண்யகாலத்தில் ஆசார்ய ஆராதனம் செய்து அவர்களுடையபரிபூர்ணமான அனுக்கிரஹத்தைப்பெற்றுவிசேஷமானபாண்டித்தியத்தை அடைந்து சுகித்திருக்கும்படி நாமும் ஸ்ரீராமரமணனையும்,உமாரமணனையும், பிரார்த்திக்கிறோம். சுபம்!

உபபத்திராதிபர்

# பிராம்மண்ய விமர்சம்.

(177-வது பக்கத்தொடர்ச்சி)

शास्त्रं भूरि निजस्वरूपमतये स्वाराधनार्थं वपुः
स्वध्यानाय मनश्च बुद्धिमनघां लब्धुं च तीर्थादिकम् ।
तत्वान्यप्युपदेष्टुमुत्तमगुरून् दत्वानुगृह्णाति नः
संसारे तदपि भ्रमेम यदि किं कुर्वीत सर्वेश्वरः ॥

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑍍𑌯𑌙𑍍𑌨𑌿𑌜𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌵𑌗𑌤𑌯𑍇 𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌧𑌨𑌾𑌯 𑌦𑍃𑌢𑌂 𑌵𑌪𑍁𑌃
𑌸𑍍𑌵𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌯 𑌮𑌨𑌶𑍍𑌚 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌨𑌵𑌦𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌚 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌦𑌿𑌕𑍇 ।
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑌭𑍍𑌯𑍁𑌪𑌦𑍇𑌷𑍍𑌟𑍁𑌮𑌤𑍍𑌰 𑌚 𑌗𑍁𑌰𑍂𑌨𑍍 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌾𑌹𑌿𑌣𑌿 𑌨𑌃
𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌜𑌡𑌵𑌤𑍍 𑌭𑍍𑌰𑌮𑍇𑌤𑍍 𑌯𑌦𑌿 𑌕𑌿𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

ஸர்வேசுவரன் தன்னுடைய நிஜஸ்வரூபத்தைப் பூராவும் தெரிந்துகொள்வதற்கு சாஸ்திரங்களையும் தன்னை ஆராதிப்பதற்கு அரோகதிருடகாத்ரமான சரீரத்தையும் தியானிப்பதற்கு நிர்மலமான மனதையும் புண்ணிய தீர்த்தங்களுக்குப் போகும்படியான தோஷமற்ற புத்தியையும் வாஸ்தவார்த்தங்களை உபதேசிப்பதற்கு அந்தந்த மதாசாரியாளையும் கொடுத்து நம்மை அனுக்கிரகித்திருக்கும்போது புத்திமயங்கி ஸம்ஸாரத்தில் உழண்டுகொண்டிருந்தால் அவன் என்ன செய்வன் என்பது - இவ்வளவு உபகாரம் செய்திருக்கும்போது அவனுடைய ஆக்ஞையான வைதீகமான நித்யகர்மாநுஷ்டானங்களை நாம் செய்யவேண்டியது அவசியமல்லவா

स्थाल्यां वैडूर्यमय्यां पचति तिलखलं चान्दनैरिन्धनौघै-
स्सौवर्णैर्लाङ्गलाग्रैर्विलिखति वसुधामर्कतूलस्य हेतोः ।
छित्वा कर्पूरखण्डान् वृतिमिह कुरुते कोद्रवाणां समन्तात्
प्राप्येमां कर्मभूमिं न भजति मनुजो यस्तपो मन्दभाग्यः ॥

𑌸𑍍𑌥𑌾𑌲𑍍𑌯𑌾𑌂 𑌵𑍈𑌡𑍂𑌰𑍍𑌯𑌮𑌯𑍍𑌯𑌾𑌂 𑌪𑌚𑌤𑌿 𑌤𑌿𑌲𑌖𑌲𑌂 𑌚𑌾𑌨𑍍
𑌦𑌨𑍈𑌰𑌿𑌨𑍍𑌧𑌨𑍌𑌘𑍈𑌸𑍍𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑍈𑌰𑍍𑌲𑌾𑌙𑍍𑌗𑌲𑌾𑌗𑍍𑌰𑍈𑌰𑍍𑌵𑌿𑌲𑌿𑌖𑌤𑌿
𑌵𑌸𑍁𑌧𑌾𑌮𑌰𑍍𑌕𑌤𑍂𑌲𑌸𑍍𑌯 𑌹𑍇𑌤𑍋𑌃 । 𑌛𑌿𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌪𑍂𑌰𑌖
𑌣𑍍𑌡𑌾𑌨𑍍 𑌵𑍃𑌤𑌿𑌮𑌿𑌹 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌕𑍋𑌦𑍍𑌰𑌵𑌾𑌣𑌾𑌂 𑌸𑌮𑌨𑍍𑌤𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾
𑌪𑍍𑌯𑍇𑌮𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌭𑍂𑌮𑌿𑌂 𑌨 𑌭𑌜𑌤𑌿 𑌮𑌨𑍁𑌜𑍋 𑌯𑌸𑍍𑌤𑌪𑍋 𑌮𑌨𑍍𑌦
𑌭𑌾𑌗𑍍𑌯𑌃 ॥

எவன் கர்மபூமியாகிய இவ்வுலகத்தில் பிராம்மணனாகப் பிறந்து தனக்குற்ற நித்யகர்மானுஷ்டானத்தைச் செய்யவில்லையோ— அவன் வைடூர்யபாத்திரத்தில் எள்ளுப்பொடியைப்போட்டு உயர்ந்த சந்தனக்கட்டையை விறகாக உபயோகித்து பாகம் செய்கிறான். பசுந்தங்கத்தால் செய்த கலப்பையைக்கொண்டு பூமியை எருக்கம்பஞ்சுக்காக உழுகிறான். தேன்வாழைமரங்களை வெட்டிக் களைந்துவிட்டுக்குறைந்த தான்யமான வாகுவிதையை பூராவும் விதைப்பவனுக்கு சமானமாகிறான். இக்காலத்தில் பிராம்மண

னுக்கு உண்டாயிருக்கும் பலவித உபத்திரவத்தால் வைதீக நித்ய கர்மானுஷ்டானம் நடைபெற்றால் போதுமென்று பெரியோர்களுடைய அபிப்பிராயமாகையால் இந்த வசனம் உதாரணமாக இங்கு உபயோகிக்கப்பட்டிருக்கிறது. மூங்கில்புதரானது தனக்குள் ஊராய்ந்து உண்டாகும் தீயினால் எப்படி அழியுமோ ஸ்வதர்மத்தைத் திடீரென்று கைவிட்ட ரஜிபுத்திரர்கள், எப்படி சிரமத்தையடைந்தார்களோ அவ்விதம் ஒருக்கால் க்லானியடையலாமேயொழிய யார் எவ்விதம் இம்சித்தபோதிலும் உலகம் உள்ளவரையில் இந்தப் பிராம்மண்ணியத்தை அழிக்கமுடியாதென்பது நிச்சயம்

ஆகையால் ஸகல பிராமணர்களும் இதரர்களுடைய கொள்கைகளில் விரோதமில்லாமல் பகவதாக்ஞையான வைதிக கர்மாவைக் காலங்களில் யதோக்தமாகச் செய்தும் சிறுவர்களை செய்து வரும்படி சிக்ஷித்தும் பிராம்மண்யத்தை குறையன்னியில் காப்பாற்றித் தாங்கள் மோக்ஷத்தை அடைவார்கள் என்று நம்புகிறேன்.

தீ. நா. தாததேசிகாசார்யார்.

---

## இராமச்சந்திரபுரம் கோதாவரி ஜில்லா. (கிழக்கு)

ஐயா,

சென்ற வியாழக்கிழமையன்று (12—4—28) சாயந்திரம் ஓர் பெரிய பிராமணமகாசபை கூடியது. ஸ்ரீ விருபாக்ஷ பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ கல்பாணந்த பாரதிசுவாமிகள் மகாசபையோரின் வேண்டுகோளை அங்கீகரித்து அக்கிராசனாதிபதியாய் அமர்ந்தார். இந்தவூரிலுள்ள ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ஸீ. கே. கோவிந்தராவ் அவர்கள் B A., L T விவாகவயதுமசோதாவினால் விளையும் பலவித தீங்குகளை ஒன்றரைமணிநேரம்வரையில் எடுத்துரைத்தனர். பூர்வபக்ஷியார் பலர் சபையிலிருந்தபோதிலும் ஒருவராவது எதிர் நின்று பேச முயலவில்லை. உபன்னியாஸகர் இதுவரையில் "ஆரியதர்ம" பத்திரிகையில் அப்போதப்போது பெரியோர்களால் எழுதிய விஷயங்களைச் சொன்னபின் பின் வருமாறு ஒன்றிரண்டு விஷயங்களையும் எடுத்துக் காட்டினார்.

சாஸ்திர சம்மதமாய் நடந்துவரும்பாலிகாவிவாகம் அசாஸ்திரீயமென்றும் ஏனென்றால் வேத காலங்களில் ருதுமதீ ஸ்திரீகளை விவாகம் செய்துகொண்டார்களென்றும் பூர்வ பக்ஷியார் வாதம்

செய்வது மிகவும் விசாரிக்கப்படும் விஷயம். வேத காலங்களில் ருதுமதிப்பெண்கள் விவாகமேநடந்ததாய் ஒப்புக்கொண்டபோதிலும் இக்காலத்திலும்கூட அப்படி நடத்துவதே நியாயம் எப்படியாகும்? "பழயன கழிதலும் புதியனபுகுதலும் வழுவலகாலவகையினுனே" என்னும் தத்தும் சிறுவர்களும் அறிவார்களே! எல்லா ஸ்மிருதிகளும் ஒன்றுகூடி பாலிகா விவாகமே காலபரிஸ்திதியையனுசரித்துவிதித்திருக்கிருர்களென்று பூர்வபக்ஷயார் இதுவரையில் பிரசுரித்திருக்கும்கிரந்தங்களில்ஒப்புக்கொண்டிருக்கின்றனர். வேத காலத்தில் ஸ்திரீகள் ருதுமதியான பின் மணம் புரிந்தனரென்ருல் அக்காலத்தில் பெண்டிர் வேதம் ஓதினரே. இப்போது அப்படி நடக்கின்றதா.

तासां द्विविधो विकल्पः ब्रह्मवादिन्यः सद्यो वहाश्चेति । ब्रह्मवादिनीनामुपनयनमग्निसंस्कारः स्वगृहे अध्ययनं भैक्षचर्या च । प्राप्ते रजसः समावर्तनम् ॥ हारीतः ।

पुरा कल्पे कुमारीणां मौञ्जीबन्धनमिष्यते ।
अध्यापनं च वेदानां सावित्री वचनं तथा ॥
पिता पितृव्योभ्राता वा नैनामध्यापयेत्परः ॥ यमः ।

𑌤𑌾𑌸𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍋 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑍍𑌯𑌃 𑌸𑌦𑍍𑌯𑍋 𑌵𑌹𑌾𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑍀𑌨𑌾𑌮𑍁𑌪𑌨𑌯𑌨𑌮𑌗𑍍𑌨𑌿𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌃 𑌸𑍍𑌵𑌗𑍃𑌹𑍇 𑌅𑌧𑍍𑌯𑌯𑌨𑌂 𑌭𑍈𑌕𑍍𑌷𑌚𑌰𑍍𑌯𑌾 𑌚 । 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌰𑌜𑌸𑌃 𑌸𑌮𑌾𑌵𑌰𑍍𑌤𑌨𑌮𑍍 । 𑌹𑌾𑌰𑍀𑌤𑌃 ।

𑌪𑍁𑌰𑌾 𑌕𑌲𑍍𑌪𑍇 𑌕𑍁𑌮𑌾𑌰𑍀𑌣𑌾𑌂 𑌮𑍌𑌞𑍍𑌜𑍀𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑌂 𑌚 𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀 𑌵𑌚𑌨𑌂 𑌤𑌥𑌾 ॥
𑌪𑌿𑌤𑌾 𑌪𑌿𑌤𑍃𑌵𑍍𑌯𑍋𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌵𑌾 𑌨𑍈𑌨𑌾𑌮𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑍇𑌤𑍍𑌪𑌰𑌃 ॥ 𑌯𑌮𑌃 ।

இவ்வாக்கியங்களைப்பூர்வபக்ஷியார்களே எடுத்துக் காட்டியபோதிலும் அவை சொல்வதுபோல் பெண்டிர் அத்தகைய நிலைமையில் லாமையால் அவை இக்காலத்திற்கமையாவென்றதையறிய இவர்களுக்கு என் உணர்ச்சியில்லை.

ஜாதியாசாரங்கள் ஜனங்களின் தேசகால பரிஸ்திதிகளையனுசரித்துள்ளன. இந்தத் தத்துவத்தையுணர்ந்தே ஸர்வக்ஞராகிய ஸ்மிருதிகர்த்தாக்கள்கிருஹ்ய சூத்திரங்களை விதித்துளர். அவை மாற்ற சிற்றறிஞர் முயல்வது கேடுவிளைப்பதற்கே யாகும். சித்த

விருத்தி தத்துவங்களை முற்றிலுமுணர்ந்து சிறுவயது முதல் பாரியபர்த்தாக்களிருவரும் ஒருவரையொருவர் நேசிக்கப் பயிலவும் சிறுமிகள் மாமியார் வீட்டிலுள்ளவர்களையெல்லாம் சிறு வயதிலிருந்து நன்குணர்ந்துஒற்றுமையுடன் வாழத் தேர்ச்சியடையவும் அமைந்த நமது விவாக பத்ததிகளின்மாட்கிமையை அறியப் பூர்வபக்ஷயார்களுக்குத் திரனற்றவிஷயம் பாரதமாதாவின் பிராரப்த கருமமேயாகும். இவ்விதம் இன்னும் பல விஷயங்களைச் சொல்லியபின் ஜகத்குருஅவர்களும் உபதேசித்த பின்னர் மகாசபையாரின் தீர்மானங்களை கவர்னர் ஜனரல் அவர்களுக்கு மசோதாவைசட்டமாக்கக்கூடாதென்றுமஹஜரானுப்பதீர்மானித்தார்கள்

## சென்னை ஸ்ரீமடத்தில் ஸ்ரீசங்கரஜயந்தி மகோத்ஸவம்.

சென்னை தம்புசெட்டித்தெரு 119-வது இலக்கமுள்ள ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடத்தில் சென்ற 20—4—28. சுக்ரவாரத்தன்று காலை $7\frac{1}{2}$-மணிக்கு ஷ்டி ஜயந்தி உத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டது, அன்று முதல் ஐந்துதினங்கள் ஸ்ரீசங்கரபகவத்பாதாளுக்கு மஹன்யாஸம் உபநிஷத், ருத்திரபாராயணங்களுடன் திவ்ய அபிஷேகமும் ஸ்ரீ சங்கரபகவத்பாதாளின் ஸஹஸ்ரநாம அர்ச்சனை தீபாராதனை, நைவேத்யம் மந்திரபுஷ்பம் ப்ராம்மணபோஜனம் இவைகள் ஒவ்வொன்றும் அத்யத்புதமாக நடைபெற்றன.

இஜ்ஜயந்தியைக்குறித்து எல்லா ஜனங்களுக்கும் இதில் ஊக்கம் வருவதற்காகத் தொடர்ந்து ஐந்தாறுமாதகாலமாக நடைபெற்றுவரும் பாகவதப்ரவசனத்தை நிருத்தி ஸ்ரீ சங்கரஜயந்திக்கு 10-நாள் முன்னதாகவே ஸ்ரீ சங்கரசரிதமானது நவரஸத்துடன் ப்ரம்மஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா அவர்களால் உபன்யஸிக்கப்பட்டது. இவ்வுத்ஸவாரம்பமுதற்கொண்டு வெளியிலிருந்து பற் பல பண்டிதர்களும் ஸ்ரீமடம் ஏஜண்டு மகா-ா-ஸ்ரீ சுப்பிரமணியய்யரவர்களால் நேரில் அழைக்கப்பட்டு அன்றன்றும் இருபண்டிதர்களுக்குக் குறையாது, காலைமுதல் மாலைவரையில் வந்திருந்து உத்ஸவத்தைக் கண்ணாரதரிசித்து மஹோபன்யாஸங்களைச் செய்தனர்.

சென்னை ஸ்ரீமடத்தில் ஸ்ரீ சங்கரஜயந்தி மகோற்சவம் கஅஎ

ஷ பண்டிதர்களும் அவர்களால் செய்யப்பட்ட உபன்யாஸ விஷயங்களும்.

ஆரம்பதினத்தன்று மாலை 4½-மணிமுதல் வித்யாரத்நாகரம் ஸ்ரீ நரசிம்மாசாரியார் அவர்கள் ஆசார்யமஹிமை என்கிற விஷயத்தையும், 6½-மணிமுதல் மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜி தலைமை உபாத்யாயர் (பிரசன்ஸ்பல்) பிரம்மஸ்ரீ கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகள் அவர்கள் ஆசாரியஸித்தாந்தம் என்ற விஷயத்தையும் இருவர்களும் வெகு அழகாக உபன்யாஸம் செய்தார்கள்.

இரண்டாவது தினத்தன்று மாலை 4-மணிமுதல் ஆர்யமத ஸம்வர்த்தினீ பத்திராதிபர் ப்ரம்மஸ்ரீ கடலங்குடி நடேசசாஸ்திரிகள் ஆரியமதரஹஸ்யம் என்ற விஷயத்தை ப்ரகாசப்படுத்தி எல்லோரும் நன்கு அறியும்படி உபன்யஸித்தார்.

குலஸ்திரீகளின் கூட்டம்.

இதன் மத்தியில் விவாஹவயதுமசோதாவைக் கண்டிக்கும் கூட்டமொன்று கூடுவதற்குஸ்ரீமடத்தில் இடவஸதியளிக்கவேண்டுமென்று பல குலஸ்திரீகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீமடம் ஏஜண்ட் அவர்களால் 5-மணிமுதல் 6½-மணிவரை அவர்களுக்கென்றே இடமளிக்கப்பட்டது. கூட்டத்திற்காக வந்திருந்த ஸ்திரீகள் 300-க்கு மேல்பட்டிருந்தனர், அவர்களில் பலர் ஷ மசோதாவைக் கண்டித்து வெகுரஸமாகப் பேசினுர்கள். முடிவில் ஸ்ரீமடம் ஏஜண்ட் அவர்களால் வந்திருந்த 300-ஸ்திரீகளுக்கும் மஞ்சள் குங்குமம் புஷ்பம் தாம்பூலம் வழங்கப்பட்டது. பரம உத்ஸாகத்துடன் பலர் கவனம் செய்து வந்திருந்த தேவதாஸ்துதிகளையும் தேசீய பாடல்களையும் பாடினுர்கள். அவர்கள் கூட்டம் 6½-மணிக்குள் கலைந்தது.

திருப்புகழ்

மைலாப்பூர் திருப்புகழ் மணி ப்ரம்மஸ்ரீ T. M. கிருஷ்ணஸாமி அய்யர் அவர்கள் B A, B L ப்ரம்மஸ்ரீ S. அனந்தராமய்யரவர்கள் B.A., B.L இவர்கள் கோஷ்டியுடன் திருப்புகழ் பஜனை செய்தனர். சுரோதிருஜனங்கள் அனைவரும் திருப்புகழ் கற்காது இனி இருக்கலாகாதென நினைத்தனர். அங்ஙனமே சிலர் மறுநாள் முதல் தங்கள் குழந்தைகளுக்குக் கற்பிக்க ஆரம்பித்தனர்.

வெகு உருக்கமாக பஜனை நடந்தது. 10-மணிக்கு மங்களம்பாட அவர்களுக்கு சுவாமிகள் ப்ரஸாதம் வழங்கப்பட்டது.

மூன்ருவது தினத்தன்று காலை 7½-மணிக்குச் சென்னை திருவட்டீசுவரன்பேட்டை அத்யயனஸபையார்கள் வந்து தைத்ரீய உபநிஷத், ருத்ரம், புருஷஸூக்தம், முதலிய பாராயணங்கள்செய்தனர். மாலை 4-மணி முதல் திவான்பகதூர் ஆஸ்திகசிரோமணி பிரம்மஸ்ரீ T. R. ராமசந்திரய்யர் B A., B L. அவர்கள் ஸ்ரீ சங்கர வைபவம் என்ற விஷயத்தை லௌகிக வைதிக திருஷ்டாந்தங்களோடு உபன்யஸித்தார். ஸந்தியாகாலம் வந்து விட்டதென்று ரஸமாய் உபன்யஸித்து வரும் இடையிலேயே அவர் நிருத்த பகவத் ப்ராஸதமும் அவர்பொருட்டளிக்க அனைவரும் ஸந்தியாவந்தனம் செய்யச் சென்றனர். பிறகு 7-மணி முதல் ப்ரம்மஸ்ரீ V கிருஷ்ணஸாமி அய்யர் அவர்கள் ஸ்ரீ பகவத்பாதாள் சரித்திரத்தை பக்க வாத்தியத்துடன் காலக்ஷேபம் செய்தார். 10-மணிக்கு மங்களம் கூறப்பட்டது.

நான்காம் நாள் மாலை 4½-மணி முதல் மஹாமஹோபாத்தியாய ப்ரம்மஸ்ரீ லக்ஷ்மணசூரி அவர்கள் குரு பக்தி என்ற விஷயத்தை சுருதி ஸ்மிருதி புராண திருஷ்டாந்தத்துடன் உபன்யசித்தார். தனக்குத் தள்ளாமையிருந்தாலும் பக்த ஜனங்களிடம் கருணை வைத்து அவர் அன்றுவந்து உபன்யஸித்ததற்காக அவர் என்றும் ஸுகியாக இருக்கும்படி கடவுளை வேண்டுகிறோம் என்றனர் பலர். பிறகு 6½-மணிமுதல் வேதாந்த மஹோபன்யாஸி ப்ரம்மஸ்ரீ நாராயணயஜ்வா அவர்கள் ப்ராம்மணர்களுக்கு முக்கியமாக வேதாத்யயனம அத்யாவச்யகம் என்பதை இரண்டுமணிநேரம் சென்றது தெரியாமலே ஸ்வாத்யாய ப்ராமணம் முழுவதும் உரைத்து அதனது அர்த்தத்தை நன்கே விளக்கிக் காட்டினார்கள் அவரது உபன்யாஸத்தைக்கேட்ட ப்ராம்மணர்களின் சிலர் மறுநாள் முதற்கொண்டு ப்ரம்மயக்ஞ காயத்ரீஜபம் என்பனபோன்றவைகளை அதிக பக்தியுடன் செய்ய ஆரம்பித்தனர் செய்தும் வருகின்றனர் பலர். இப்படிப் பலரை நேரில் நல்வழிப்படுத்தும் உபன்யாஸத்தை மணி அதிகமாய் விட்டது எனச் சுருக்கிவிட்டார் பிறகு இரண்டு பெரியாருக்கும் பகவத்பாதாளின் ப்ராசாதம் அளிக்கப்பட்டது.

ஐந்தாநாளாகிய மங்களவாரமன்று அவதாரதினமானதால் விசேஷஸமாராதனை பூஜை முதலியவைகள் நடந்தன, மாலை 4-மணிக்கு பிரம்மஸ்ரீ வெங்கடேசதீக்ஷிதர் அவர்கள் புருஷப்ரயத்னம் என்ற விஷயத்தை செவ்வென உபன்யஸித்தார். அவருக்கும் ஸ்வாமிகள் ப்ரஸாதம் அருளச்செய்யப்பட்டது, பிறகு ஸந்தியாவந்தனம் செய்ய எல்லோரும் சென்றனர்.

பிறகு $6\frac{1}{2}$-மணிமுதல் ப்ரஸங்கவர, கவி, ப்ரம்பஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் ஸ்ரீ பகவத்பாதாள் அவதாரத்தை மிகவும் ச்ராவ்யமாகவும் ப்லரதை முந்திய தினங்களில் உபன்யஸித்திருந்தாலும் கேட்கக்கேட்க அவரது உபன்யாஸம் புதிது புதிதாகவே தோன்றி அதிக ஆனந்தத்தைத் தந்தது. $7\frac{1}{2}$-மணிக்குள் ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் அவதாரம் முடிந்தது, தீபாராதனை முதலியவைகள் வழக்கம்போல் நடந்தது, பிறகு ஷை உபன்யாஸகருக்கு ஸ்வாமிகள் அநுக்ரஹம் அன்புடன் அருளப்பட்டது.

## நகரப்ரவேசம்.

இரவில் $7\frac{1}{2}$-மணிக்கு மேல் ஸ்ரீமாதாசாய பிம்பத்தை அழகிய ஓர் விமானத்தின் மீது அலங்கரித்தனர் பிராம்மணர்களே பரம பக்தியுடன் பகவத்பாதாளைச் சுமந்தனர், முன்னே வாத்தியகோஷங்கள் பின்னே வேத கோஷங்கள் முழங்க பகவத்பாதாளின் பட்டணப் பிரவேசம் வெகு சிறப்பாக நடைபெற்றது சிவபக்த அக்ரேஸரர் ஒருவர் இவ்வூர் கல்விச் சாலை மாணுக்கர்களை ஒன்று சேர்த்து பஜனை செய்தார். வீதியில் உள்ள ஜனங்கள் அனைவர்களும்இவைகளைக்கண்டு வியப்படைந்தனர். 11-மணிக்கெல்லாம் ஆஸ்தானம் வந்து எல்லோருக்கும் ப்ரஸாதம் வழங்கப்பட்டது. ஸ்ரீமடம் ஏஜண்டு மகா-ா-ஸ்ரீ சுப்பிரமணியய்யர் அவர்கள் பாராயணம் செய்தவர்களுக்கும், பண்டிதர்களுக்கும் ஸம்மானம் செய்தார். பிறகு ஸாஷ்டாங்க வந்தனம் செய்து குற்றங்குறைகளை மன்னிக்கும்படிப் பிராம்மணர்களை வேண்டினர். அவர்களும் உள்ளம்பூரிக்க நிஷ்கல்மஷமாகக் குறைகளே இல்லையென்று சொன்னார்கள். பிறகு இவ்வளவிற்கும் காரணமாயிருந்துவரும் ஷை

ஏஜண்டு சுப்பிரமணி அய்யர் அவர்களை நீண்டகாலம் ஜீவித்திருக்கும்படியும் அரோக திருடகாத்திராகவிருக்கும்படியும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசங்கரபகவத்பாதாளை பூஜித்துபாதாரவிந்தங்களில்வந்தனம் செய்து எல்லோரும் பிரார்த்தித்தார்கள். இது நிற்க ஸ்ரீ பகவத்பாதாளை பூஜித்துவரும் ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்கள்லௌகிகத்தில்ஏஜண்ட் சுப்பிரமணியய்யர் போல் வைதிக விஷயத்தில் அதிகச் சிரத்தையுடன் இருந்து இவ்வுத்ஸவத்தை மிக அழகாக நடத்தி வைத்தார். முடிவில் எல்லா ஜனங்களும் ஷை சாஸ்திரிகளுக்கும் ஆரோக்கியம், ஆயுஸ், ஸந்ததி இவைகளை கோரி ஸ்ரீமதாசார்யாளுடைய பாதகமலத்தில்வந்தனம் பக்தியுடன் செய்தார்கள்.

## விடாயாற்று உத்ஸவம்.

25-4-28 புதன்கிழமை காலை ஸ்ரீ பகவத்பாதாளுக்கு ஸ்ரீமடத்தில் உள்ள வைதிகர்கள் மஹன்யாஸம், ருத்ரம், முதலிய பாராயணங்கள் செய்ய கடந்த தினங்களைக்காட்டிலும் அன்றுதான் வெகு ஆனந்தகரமென்று கூறும்படியாக அபிஷேகம், ஸஹஸ்ரநாமார்ச்சனை, தீபாராதனை, நைவேத்யம், மந்திரபுஷ்பம் முதலியவைகள் நடந்தன. இவ்வாண்டிற்கொப்பாக ஓராண்டையும் கூற முடியா. அவ்வளவு சிறப்பாக நடந்தது. இவ்வுத்ஸவத்தில் ஈடுபட்டவைதிகர்களும், லௌகிகர்களும், ஒருவிதக குறையுமில்லாது பரம உத்சாகத்துடன் முடிவுரை ஒற்றிருந்து காரியத்தைப்பூர்த்தி செய்தனர். இவைகள் அனைத்துக்கும் காரணம் ஸ்ரீ பகவத்பாதாளின் அனுக்ரகமேயாகும். ஆகவே ஒவ்வொருவரும் இவ்வாண்டு முதலாவது ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்காராசாரியஸ்வாமிகள் மஹிமையைத் தெரிந்துகொண்டு ஸ்ரீமதாசார்ய பாதகமலத்தில் பக்தி விநயத்துடன் ஈடுபட்டவர்களாக ஆகவேண்டும்என்று ஷை ஸ்ரீமதாசார்யாளை சாஷ்டாங்க வந்தனம்செய்துபிரார்த்திக்கிறேன்.

சுபம்! சுபம்! சுபம்!

பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ வே. சோமதேவசர்மா அவர்கள் சிஷ்யன்

தீ. ராமநாத தீக்ஷிதர்.